**தேசிய அருங்கலைகள் பேரவை - 2020**

1. **நிதிக்கூற்றுக்கள்**

1.1 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய அருங்கலைகள் பேரவையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பேரவையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 **நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட ஆளுகைக்குரிய தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பேரவையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பேரவை

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பேரவையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக மன்றத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக்

கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பேரவையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பேரவையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பேரவயின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியிருக்காமை

| உரிய நியமங்களுடனான இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 (47) இன் பிரகாரம், நியாயப் பெறுமதியில் கருத்திற்கொள்ளக்கூடிய அளவிலான வேறுபாடுகள் காணப்படுகின்ற ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் உருப்படிகளுக்காக வருடாந்த மெய்மையாய்வொன்று தேவைப்படும். எனினும், பேரவையினால் நீண்ட காலமாக காணப்படும் ஆதனங்களுக்காக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 04/2018 இன் பிரகாரம், மெய்மையாய்வுக் குழுக்கள் நியமிக்கப்பட்டு மெய்மையாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | பெறுமதியில் கருத்திற்கொள்ளக்கூடிய அளவிலான வேறுபாடுகள் காணப்படுகின்ற ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் உருப்படிகளுக்காக வருடாந்த மெய்மையாய்வு செய்யப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக 08 நிலையான சொத்துக்களுக்குரிய மீதிகள் நிலையான சொத்துக்கள் பட்டோலையுடன் ஒப்பிடும் போது ரூபா 37,958,623 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. இந்த சொத்துக்களை வேறு வகையில் சான்றுறுதிப்படுத்துவதற்கு அல்லது பெறுமதியை சான்றுபடுத்துவதற்குரிய சொத்துக்களின் மதிப்பீட்டு அறிக்கைகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்களில் காணப்படும் வேறுபாடு நீண்ட காலமாக முன்கொண்டுவரப்படுகின்ற காரணத்தால் அந்த வேறுபாட்டினை இனங்காண முடியாதுள்ளது என்பதும், அனைத்து சொத்துக்களையும் மீள்மதிப்பீடு செய்து கணக்குகளில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிலையான சொத்துக்கள் மற்றும் பட்டோலைகளுக்கிடையே உள்ள வேறுபாடுகளை இனங்கண்டு சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ரூபா 1,635,380 பெறுமதியான மீண்டெழும் செலவினங்கள் மூலதனத் தன்மையிலான செலவினங்களாக கணக்கு வைக்கப்பட்ட காரணத்தால், அந்த அளவினால் சொத்துக்கள் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், ஆண்டுக்கான பற்றாக்குறை அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த செலவினங்கள் பொருண்மையான அளவில் சொத்துக்களின் பெறுமதியில் அதிகரிப்பொன்று ஏற்படுகின்றமையால் மூலதனமாக்கப்பட்டது என்பது. | மூலதனத் தன்மையுடைய சொத்துக்கள் மாத்திரம் சொத்துக்களில் சேர்க்கப்பட வேண்டும் என்பது. |
| (இ) | கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்ததாரரிடமிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 888,834 தொகை மற்றும் இயந்திரங்களை பழுதுபார்ப்பதற்காக நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 117,512 எனுமாறு ரூபா 1,006,346 கூட்டுத்தொகை மீளாய்வாண்டின் சொத்துக்களாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நிறுத்தி வைக்கப்பட்ட பணத்தில் முழுத் தொகையும் செலுத்தப்படுதல் நிச்சயமற்றது என்பதால், அவற்றை மூலதனமாக்கவில்லை என்பது மற்றும் உரிய உத்தரவாதக் காலம் நிறைவடைந்த பின்னர் நிறுத்தி வைக்கப்பட்ட பணத்தை செலுத்தும் போது அந்த பணத்தை மூலதனமாக்கப்பட்ட சொத்தாக கணக்கு வைப்பதாக. | ஆண்டுக்குரியததாக ஒப்பந்ததாரரிடம் நிறுத்தி வைக்கப்பட்ட பணம் சொத்தாகவும் பொறுப்பாகவும் கவனத்திற்கொள்ள வேண்டும் என்பது. |

**1.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28ஆந் திகதிய 2020/1ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கையின் II ஆம் பகுதியின் 9ஆம் பந்தி | அருங்கலைகள் பேரவையின் அரச நிதியின் பொறுப்பு தொடர்பில் பிணை வைக்க வேண்டிய 06 உத்தியோகத்தர்களினால் பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் என்பது தொடர்பில் இனங்கண்டு எதிர்காலத்தில் பிணை வைப்பதற்கு உரிய பணிகளை மேற்கொள்வதற்காக உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது என்பது. | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 756(6) மற்றும் 2020 ஆகஸ்ட் 28ஆந் திகதிய 01/2020ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 11.3 ஆம் பந்தி | 2019ஆம் ஆண்டுக்கான பேரவையின் 109 பயிற்சி நிலையங்களில் 72 நிலையங்களின் பொருள் மெய்மையாய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டிராததுடன், 2020ஆம் ஆண்டுக்காக மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. | 2019ஆம் ஆண்டுக்கான பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளும் போது கொரோனா தொற்றுநோய் காரணமாக பிற மாகாணங்களுக்கு செல்வதில் அபாயம் நிலவிய காரணத்தால் இந்த நிலமை ஏற்பட்டது என்பது, மற்றும் 2020ஆம் ஆண்டுக்குரிய பயிற்சி நிலையங்களின் பொருள் மெய்மையாய்வினை மேற்கொண்டு உரிய அறிக்கைகளை உரிய முறையில் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கைகளின் பிரகாரத் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 2003 ஒக்தோபர் 28ஆந் திகதிய பீஈடீ 17ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | 2020 பெப்ரவரி 01 முதல் பெப்ரவரி 16ஆந் திகதி வரையிலும் இந்தியாவில் இடம்பெற்ற 34 ஆவது சூரஜ் கூன்ட் சர்வதேச கைவினைப் பொருட்கள் கண்காட்சியில் பங்குபற்றுவதற்காக இரு உத்தியோகத்தர்களால் குறித்த விண்ணப்ப படிவம் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டு முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய | வெளிநாட்டு சந்தைப்படுத்தல் கண்காட்சிக்காக செயல்நடவடிக்கைத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்து மூலதன நிதியில் உரிய செலவினத்தை மேற்கொள்வதற்கு கௌரவ அமைச்சர் அவர்கள் அங்கீகாரம் வழங்கியுள்ள சந்தர்ப்பமொன்றில் ஒவ்வொரு வெளிநாட்டு கண்காட்சிகளுக்கும் | இந்த சுற்றறிக்கையின் பிரகாரம், முன்னர் விண்ணப்பட் கோரி அங்கீகாரம் பெற்ற பின்னர் மாத்திரம் வெளிநாட்டு சுற்றுலாவில் பங்குபற்ற வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போதிலும், அவ்வாறு பெற்றுக்கொள்ளாது விமானப் பயணச்சீட்டு கட்டணம், இணைந்த படிகள் மற்றும் ஏனைய செலவினங்களுக்காக ரூபா 783,230 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தனித்தனியாக அரச வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தில் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டுமா என்பது தொடர்பில் அரச வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தில் தெளிவுபடுத்தலொன்று மற்றும், அறிவுரையை பெற்றுக்கொள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளின் அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு 2020.07.17ஆந் திகதிய கடிதம் அனுப்பப்பட்ட போதிலும், பதில் கிடைக்காமையால் மீண்டும் 2020.12.04ஆந் திகதிய பிரம்புகள், பித்தளை, களிமண், மரத்தாலான பொருட்கள் மற்றும் கிராமிய கைவினைப்பொருட்கள் மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சருக்கு கடிதமொன்றினை அனுப்பு அதன் பிரகாரம் அமைச்சின் மேலதிக செயலாளரால் அரச வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதம் அறிவுரைகளுக்காக முன்வைக்கப்பட்டுள்ளது என்பது. | |
| (ஈ) | 2003 யூன் 02ஆந் திகதிய பீஈடீ 12ஆம் இலக்க நல்லாட்சி தொடர்பான பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5..3 ஆம் பிரிவின் பிரகாரம் | நிதியாண்டு நிறைவடைந்து 150 நாட்களினுள் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், 2018ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டறிக்கை அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பது. | சுற்றறிக்கையின் பிரகாரம் ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். |
| (உ) | 2020 ஆகஸ்ட் 28ஆந் திகதிய 01/2020ஆம் இலக்க மற்றும் 2015 யூலை 14ஆந் | உப கட்டுநிதியை பெற்றுக்கொள்ளும் பதவிநிலை உத்தியோகத்தரால் அந்த பணியை நிறைவு செய்து 10 நாட்களினுள் அந்த | இவ்வாறான நிலைமையை எதிர்காலத்தில் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | இந்த சுற்றறிக்கையின் பிரகாரம், முற்பணம் வழங்கப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| திகதிய 3/2015ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | இடைக்கால உப கட்டுநிதியை மீள செலுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், முற்பணத்தை தீர்ப்பதற்காக 02 வாரங்கள் முதல் 03 மாதங்கள் வரையான காலம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த 30 சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன், கட்டுநிதியை தீர்ப்பதற்கு முன்னர் மீள கட்டுநிதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | | பின்னர் பணி நிறைவடைந்தவுடன் முற்பணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,321,142 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 688,033 ஆகும். அதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா 633,109 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மொத்த வருமானம் ரூபா 42,801,274 இனால் குறைவடைந்தமை பிரதானமாக காரணமாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் திஸ்ஸமஹாராம பிரதேச செயலாளர் பிரிவுக்குரிய கிராம உத்தியோகத்தர் பிரிவின் 16187 ஹெக்டேயர்கள் பரப்பளவான அரச காணியில் காவன்திஸ்ஸபுர கைத்தொழில் கிராமம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. காணிகள் ஆணையாளர் நாயகத்தின் 2013 நவம்பர் 28ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம், இந்த காணியை 30 வருடங்களான நீண்ட காலப் பகுதிக்கு குத்தகைக்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், | 2021 ஹம்பாந்தோட்டை காவன்திஸ்ஸபுர கிராமத்தினை உற்பத்திக் கிராமமொன்றாக எதிர்காலத்தில் நடாத்திச் செல்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளமை. | சட்டரீதியான வரி உடன்படிக்கையொன்றி கை கைச்சாத்திட்டு, கிராமத்தினை ஆக்கபூர்வமான முதலீட்டு நடவடிக்கையொன்றில் ஈடுபடுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இதுவரையிலும் அந்த பணி மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. இதற்கான தவணைப் பணமாக ரூபா 720,000 மற்றும் தண்டப்பணமாக ரூபா 60,000 திஸ்ஸமஹாராம பிரதேச செயலாளருக்கு 2020ஆம் ஆண்டினுள் செலுத்தப்பட்டிருந்ததுடன், உரிய பராமரிப்பிற்காக ரூபா 876,869 எனுமாறு ரூபா 1,656,869 செலவிடப்பட்டிருந்த போதிலும், சட்டரீதியான குத்தகை உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிராதது டன், இந்த கிராமத்தினை ஆக்கபூர்வமான முதலீட்டு நடவடிக்கைக்காக ஈடுபடுத்தியிருக்கவில்லை. | | |
| (ஆ) | அனைத்து கைவினைப் பொருள் கிராமங்களையும் இனங்கண்டு அந்த கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகள், இயந்திரங்கள், மூலப்பொருட்கள் மற்றும் உபகரணங்களின் உற்பத்தி மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள், சந்தை தேவைப்பாடு ஆகிய அனைத்து பிரிவுகளின் கீழும் அபிவிருத்தி செய்வதற்காக கிராமத்தினை தொழிற்தளமாக மாற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2020ஆம் ஆண்டுக்காக ரூபா 4,000,000 ஆன நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த துடன், அவற்றுள் ரூபா 3,431,081 செலவிடப்பட்டிருந்தது. இதன் கீழ் 02 கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்காக | 2020ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அலவல மற்றும் பியகம ஆகிய இரு கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அலவல கிராமத்தில் கைவினைஞர்களுக்கான வேலைத்தளமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,584,000 பெறுமதியான செவிலித் தகரங்கள் மற்றும் ரூபா 79,200 தொகை ரந்தாவடுன பிரம்பு வேலை கிராமத்தின் வேலைத்தளத்தினை நிர்மாணிப்பதற்கான சீமெந்து பொதிகளை வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்டதாக மற்றும் அவர்களின் முயற்சியின் பங்களிப்புடன் அந்த வேலைத்தளங்களின் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றது என்பது. | நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேறும் வகையில் பணியாற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், அலவில கிராமத்தில் வசிக்கும் 100 பதிவு செய்யப்பட்ட கைவினைஞர்களுக்காக தகரம் மற்றும் சீமெந்து ஆகியவற்றை கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,663,200 செலவிடப்பட்டிருந்தது. இந்த பொருட்களை பகிர்ந்தளிக்கும் விழாவிற்காக 2021ஆம் ஆண்டினுள் ரூபா 348,119 செலவிடப்பட்டிருந்தது. | | |
| (இ) | ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தின் அருங்கலைச் சபை அலுவலகத்தின் கீழ் பதிவு செய்திருந்த நான்கு கைவினைஞர்களினால் 2019ஆம் ஆண்டின் போது கோரப்பட்ட உபகரணங்களை பெற்றுக்கொள்வதற்காக 2020 திசெம்பர் 28ஆந் திகதி 399370ஆம் இலக்கமுடைய ரூபா 81,380 பெறுமதியான காசோலையை தெரிவு செய்யப்பட்ட விலைக்கேள்வியாளருக்கு 2021 சனவரி 21ஆந் திகதி முன்வைக்கப்பட்டிருந்தது. ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக அதாவது 2021 சனவரி 29ஆந் திகதி வரையிலும் அந்த பொருட்கள் உரிய கைவினைஞர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக காலி, மாத்தறை மற்றும் கண்டி மாவட்டங்களில் உபகரணங்களை கோரியிருந்த கைவினைஞர்களின் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் அதற்காக விலைக்கேள்வி கோரப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கைவினைஞர்களின் தேவைப்பாடுகளை தாமதிக்காது நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | காவந்திஸ்ஸபுர சவிய விற்பனை கிராமத்தின் மூலப்பொருள் இழைய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 1000 சணல் கன்றுகள் இழைய நடுகைக்காக ரூபா 414,410 செலவிடப்பட்டிருந்தது. மதிப்பிடப்பட்ட தொகையான ரூபா 40,000 ஆன பராமரிப்பு செலவினம் உள்ளடக்கப்பட்டிராத போதிலும், கன்றுகளை நட்ட பின்னர் எதுவித பராமரிப்பும் காணப்படாமையால் கன்றுகள் பதியமிடப்பட்டு இரு வாரங்களின் பின்னர் கன்றுகள் வாடியிருந்ததாக பேரவையின் உத்தியோகத்தர் ஒருவர் மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டிருந்தது . அவ்வாறே, 2017ஆம் ஆண்டின் போது ஆலோககம 4000 சணல் கன்றுகளை பதியமிட்டிருந்த போதிலும், 2019ஆம் ஆண்டின் இறுதியளவில் எந்தவொரு சணல் கன்றும் பௌதீக ரீதியில் காணப்படவில்லை என்பது உள்ளக கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட தளப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது. | ஹம்பாந்தோட்டை மூலப்பொருள் பயிர்ச்செய்கையின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தென் மாகாண உதவிப் பணிப்பாளர் அறிவுரை வழங்கியுள்ளமை. | செயற்திட்டத்தின் பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் பராமரிப்பு பணிகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | 2008 திசெம்பர் 23ஆந் திகதிய 08/2322/349/015ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் இலங்கை கைப்பணிகள் சபையின் 185 ஊழியர்கள் அருங்கலைகள் சபைக்கு இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், | மூலம் இலங்கை கைப்பணிகள் சபையின் ஊழியர்கள் அருங்கலைகள் சபைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட பின்னர் நியமிக்கப்பட்ட குழுவொன்றின் ஊடாக நிலையான சொத்துக்கள் நீங்கலாக ஏனைய சொத்துக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மற்றும் பயிற்சி நிலையங்களிலுள்ள தளப் பொறுப்பு உத்தியோகத்தர்கள் | பொருட் பதிவேட்டினை சட்டரீதியான பொறுப்பேற்பதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், பயிற்சி நிலையங்களின் வருடாந்த வருமானம், செலவினம் மற்றும் சொத்துக்கள் தொடர்பில் வருடாந்தம் நிதிக்கூற்றுக்களில் |

| | | | |
|---|---|---|---|
| | சபையின் பொருட் பதிவேட்டினை சட்டரீதியான பொறுப்பேற்பதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. பயிற்சி நிலையங்களின் வருடாந்த வருமானம், செலவினம் மற்றும் சொத்துக்கள் தொடர்பில் வருடாந்தம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், அருங்கலைகள் பேரவையால் நிலையத்திற்கு பொறுப்பான 87 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 46,346,838 ஆன தொகை வருடாந்தம் செலவிடப்படுகின்றது. | நிறுவனத்தின் நிரந்தர உத்தியோகத்தர்களாக காணப்படுவதால் அவர்கள் பயிற்சி மதியுரைச் சேவையில் ஈடுபடுவதால் அவர்களுக்காக அரசினால் நிரந்தர சம்பளத்தினை செலுத்துவதற்காக இந்த செலவினம் மேற்கொள்ளப்பட்டது என்பது. | உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | பயிற்சி நிலையங்களுக்கு உரிய வசதிகளை வழங்குவதற்கு 2020ஆம் ஆண்டுக்காக ரூபா 3 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் செலவிடப்பட்டுள்ள தொகை ரூபா 1,869,051 ஆக காணப்பட்டது. நிதி ஒதுக்கீடானது 2019ஆம் ஆண்டுக்கு ஒப்பாக ரூபா 2 மில்லியனால் குறைவடைந்திருந்தது. பயிற்சியாளர்களை பயிற்றுவிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 500,000 ஆன நிதியேற்பாடு செலவிடப்பட்டிருக்கவில்லை. இருங்கலைகள் பேரவைக்கு சொந்தமான 112 பயிற்சி நிலையங்கள் காணப்பட்ட போதிலும், 41 நிலையங்களில் மாத்திரம் பயிற்சி பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்தன. | 2020ஆம் ஆண்டுக்கான இடைக்கால வாக்குப்பண பதிவேட்டினூடாக அவ்வப்போது நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டது. எனினும், அந்த நிதியேற்பாடு திறைசேரியினால் வழங்கப்படடாமையின் அடிப்படையில் இறுதியாக கிடைத்த பணம் மற்றும் இறுதி நான்கு மாதங்களின் நிதியேற்பாட்டின் அடிப்படையில் வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டது என்பது மற்றும் அதன் பிரகாரம் 2019ஆம் ஆண்டுக்கு ஒப்பாக 2020ஆம் ஆண்டின் நிதியேற்பாடுகள் குறைக்கப்பட்டது என்பதும், பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிப்பதற்காக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்ட போதிலும், நாட்டில் காணப்பட்ட நிலமையின் அடிப்படையில் இந்த பயிற்சிகளை மேற்கொள்ள முடியாதிருந்தது என்பது. | நிதியேற்பாட்டினை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கும், அனைத்து பயிற்சி நிலையங்களினதும் பயிற்சிகளை நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வடமேல் மாகாணத்தின் மற்றும் பொலன்னறுவை மாவட்டத்தினுள் அமைந்துள்ள 23 பயிற்சி நிலையங்களின் வருடாந்த வருமானம் ரூபா 2,056,420 ஆக காணப்பட்டதுடன், செலவினம் ரூபா 2,033,565 ஆக காணப்பட்டது. இந்த செலவினத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,847,261 ஆன கைத்தொழில் படியொன்று பயிற்சியெறும் பயிலுநர்களுக்கு செலுத்தப்பட்டுள்ள போதிலும், அதற்காக முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எந்தவொரு பயிற்சி நிலையத்திலும் பயிற்சியை நிறைவு செய்யும் பயிலுநரக்கள் அந்த பயிற்சி நிலையத்தினை மையமாக கொண்டு மீண்டும் தமது உற்பத்தி பணிகளில் ஈடுபடுவதாகவும், அந்த உற்பத்திகளை விற்பனை செய்வதால் கிடைக்கும் வருமானம் நிலையத்தின் கணக்கில் செலவு வைக்கப்படுவதுடன், அவற்றுள் 10% ஆன அளவு நிறுத்தி வைக்கப்பட்டு எஞ்சிய தொகை மாகாண உத்தியோகத்தர்களின் முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் கைத்தொழில் படிகளாக செலுத்தப்படுகின்றமை. | அனைத்து கொடுப்பனவுகளும் முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட வேண்டும். |

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 சனவரி 25ஆந் திகதிய 08 ஆம் இலக்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.12.2 ஆம் பந்தியின் பிரகாரம் பணிகளுக்காக அமைப்புக் குறிப்பீடுகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைய பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதாக பணி நிறைவு செய்யும் சான்றிதழொன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு சான்றிதழொன்று பெற்றுக்கொள்ளப்படாது ரூபா 1,904,844 கூட்டுத்தொகை தலைமை அலுவலகத்தின் கேட்போர் கூடத்தின் பழுதுபார்த்தல் கிரயமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | வழிகாட்டிக்கமைய செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2006 சனவரி 25ஆந் திகதிய 08ஆம் இலக்க தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.8 ஆம் பிரிவின் பிரகாரம், தலைமை அலுவலகத்தின் கேட்போட் | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | வழிகாட்டிக்கமைய செயற்பட வேண்டும் என்பதுடன், உரிய காலப்பகுதிக்குரிய செயலாற்றல் பிணைகள் |

| | | | |
|---|---|---|---|
| | கூடத்தின் பழுதுபார்த்தல், பாதுகாப்பு சேவைகள் மற்றும் சுத்திகரிப்பு சேவையினை பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தத்தில் பணிகளை நிறைவு செய்வதற்கு உரிய காலப்பகுதிக்குரிய செயலாற்றல் பிணைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (இ) | கைப்பணிப் பொருட் கலைஞர்களுக்காக புதிய தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மின்சார குயவுச் சக்கரங்களை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 2,475,000 தொகை 2020 திசெம்பர் 31ஆந் திகதியளவில் செலவிடப்பட்டிருந்ததுடன், பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.12.2 மற்றும் 8.12.3 பிரிவுகளின் பிரகாரம், விநியோகிக்கப்பட்ட பொருட்கள் ஒப்பந்த நியமங்களுக்கு அமைவாக உள்ளதாக சான்றுபடுத்தி கொடுப்பனவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்காது, குறித்த பொருட்கள் கிடைப்பதற்கு முன்னர் அனைத்து பணமும் செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்ததாரரால் குறித்த பொருட்களை வழங்க முடியுமான திகதியாக 2021 பெப்ரவரி 15ஆந் திகதி கோரப்பட்டுள்ள போது 2020 திசெம்பர் 31ஆந் திகதி கொடுப்பனவுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. இந்த ஒப்பந்தத்திற்காக பெறுகைகள் வழிகாட்டிக் கோரவயின் 5.4.8 பிரிவின் பிரகாரம் ரூபா 123,750 தொகையான செயலாற்றல் பிணைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த வழங்குனர் இதற்கு முன்னரும் தேசிய அருங்கலைகள் பேரவைக்காக மின்சார குயவுச் சக்கரங்களை தயாரித்து வழங்கியுள்ளதுடன், இந்த நிறுவனத்துடன் அவரால் கட்டியெழுப்பப்பட்டுள்ள நம்பிக்கையின் அடிப்படையில் அவர் குறித்த பணியை மேற்கொண்டுள்ளமை மற்றும் எதிர்காலத்தில் உரிய பெறுகைகள் நடைமுறையை பின்பற்றுவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்பது. | பொருட்கள் ஒப்பந்த நியமங்களுக்கு அமைவாக உள்ளதாக சான்றுபடுத்துவதற்கு முன்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்படக் கூடாது என்பதுடன், வழிகாட்டிக்கமைய செயலாற்றல் பிணையும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | வராகொடை செரமிக் பயிற்சி நிலையத்தில் 18 இயந்திர உருப்படிகளை பழுதுபார்ப்பதற்காக ரூபா 3,615,250 தொகையான ஒப்பந்தத்தில் 35 சதவீதமான பணியின் அளவானது நிறைவு செய்யப்படாதுள்ள போது ஏனைய வேலைப் பகுதிகளுக்காக ரூபா 2,232,737 செலுத்தி ஒப்பந்தம் நிறைவு | வராகொடை செரமிக் பயிற்சி நிலையத்தில் 18 இயந்திர உருப்படிகளை பழுதுபார்ப்பதற்காக வழங்கப்பட்ட கட்டளையின் 18ஆம் இலக்க உருப்படியான மின்சார அடுப்பின் பழுதுபார்த்தல் 2021ஆம் ஆண்டின் போது நிறைவு செய்ய | உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம், வேலையின் அனைத்து பகுதிகளும் நிறைவு செய்யப்படும் வரையிலும் கொடுப்பனவு மேற்கொள்ளப்படக்கூடாது என்பதுடன், பழுதுபார்த்தல் |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டிருந்தது. இந்த பழுதுபார்க்கப்பட்ட உபகரணங்களுக்கு உத்தரவாதக் காலம் அல்லது பராமரிப்புக் காலமொன்று சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில் லை. மேலும், பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.8 ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 180,762 பெறுமதியான செயலாற்றல் பிணைகளும் விலைக்கேள்வியாளரால் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பது மற்றும் இந்த பொறி மற்றும் இயந்திரங்களின் பழுதுபார்த்தலுக்காக உத்தரவாதக் காலமொன்று பெற்றுக்கொள்ளப்படாது பிடிகாசு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை. | செலவினம் உயர்வான பெறுமதியை கொண்டுள்ளமையால் பிடிகாசு போதுமானதாக இல்லாதிருந்தமை மற்றும் உபகரணங்களுக்கு உத்தரவாதக் காலம் அல்லது பராமரிப்புக் காலமொன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய அருங்கலைகள் பேரவையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 262 மற்றும், உள்ளபடியான பதவியணி 207ஆக காணப்பட்டதுடன், 62 வெற்றிடங்கள் நிலவின. தாபனவிதிக் கோவையின் 13.3 ஆம் பந்தியின் பிரகாரம், பதிற்கடமை நியமனமொன்றை வழங்குவதற்கு நிரந்தர நியமனமொன்றை வழங்கும் வரை ததற்காலிகமாகவே வழங்க முடியும் என்பதுடன், அது ஆகக் கூடியது 3 மாத காலத்திற்கு வரையறுக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், 4 பதவிகளுக்காக 6 உத்தியோகத்தர்கள் 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பதிற்கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தனர். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் நோக்கத்தினை பிறள்வடையாது கைவினைஞர்களுக்கு நிறைவேற்றக்கூடிய வகையில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் போதியளவான பதவியணியொன்றினை இணைத்துக்கொள்ள உயர் முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது கணக்காய்வு ஐயவினாக்களை வெளியிடுவதற்கு பதிலாக 07 உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்டிருந்தன. அதற்குரிய 04 உள்ளக சுற்றறிக்கைகளை வெளியிடுவதற்க திட்டமிடப்பட்டிருந்த போதிலும், இந்த அறிக்கையின் திகதி வரையிலும் இந்த சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் அடிப்படையில் சுற்றறிக்கைகள் தாமதமின்றி வெளியிடப்பட வேண்டியதுடன், அந்த கண்டுபிடிப்புகளை நிறுவனத்தின் அபிவிருத்திக்காக பயன்படுத்துவதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020ஆம் ஆண்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டினை நிதிக்கூற்றுகளுடன் பரிசோதிக்கும் போது 06 செலவின விடயங்களுக்கு உரியதாக ரூபா 9,096,034 ஆன மதிப்பீட்டுப் பெறுமதியை விஞ்சி செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த வேறுபாடு 29 சதவீதம் முதல் 334 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. அதன் காரணமாக பாதீடானது ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021ஆம் ஆண்டுக்கான பாதிடப்பட்ட எல்லையை விஞ்சி செலவினம் மேற்கொள்ளாதிருக்க உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளமை. | மதிப்பிடப்பட்ட பாதீட்டு எல்லையினுள் செலவினம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |